# <u>மாகாணம், வலயம், கோட்டம் மற்றும் பாடசாலை மட்ட தரவு உத்தியோகத்தர்களுக்கான ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டம்</u>




***கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு***

***2024***

**பொருளடக்கம்**


| | பக்க இலக்கம் |
|---|---|
| 1. அறிமுகம் | 01 |
| 2. தரவு உத்தியோகத்தர்களுக்கான ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் குறிக்கோள்கள் | 03 |
| 3. தரவு உத்தியோகத்தர்களை ஊக்குவிப்பதற்கான செயன்முறைகள் | 03 |
| 4. நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் கால எல்லை | 08 |
| 5. கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு | 08 |

## 1. அறிமுகம் :

*கல்விக்கான நிலைபேறுடன் கூடிய அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்காக சகல நாடுகளும் பண்புத்தரம் மிக்க கல்வி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல் மற்றும் அதற்காக பங்களிப்புச் செய்பவர்களுக்கு பண்புத்தரம் மிக்க சேவைகளை வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. குறித்த இலக்குகளை அடைந்து கொள்வதற்கான கல்விக் கொள்கைகளை வகுத்தல் மற்றும் திட்டமிடல் செயன்முறையின் போது இற்றைப்படுத்தப்பட்ட மற்றும் சரியான கல்விசார் தரவுகளின் அடிப்படையில் தீர்மானமெடுத்தல் வேண்டும். இதற்காக சரியான மற்றும் இற்றைப்படுத்தப்பட்ட தரவுகளை முறையாகவும் துரிதமாகவும் பெற்றுக் கொள்வதற்காக கல்வி அமைச்சினால் நிகழ்நிலை மூலமாக தரவுகளை சேகரிப்பதற்கான செயன்முறையொன்று ஏற்கனவே பொதுக் கல்வி முறைமைக்கு அறிமுகம் செய்யப்பட்டுளது. உதாரணமாக வருடாந்த பாடசாலை கணக்கெடுப்பு, ஆசிரியர்களுக்கான தேசிய கல்வி முகாமைத்துவ தகவல் முறைமை போன்றனவற்றைக் குறிப்பிடலாம். அதற்கமைய உரிய நிகழ்நிலை தரவு முறைமைகளை பொறுப்புடைமையுடன் கூடிய வகையில் இற்றைப்படுத்துதல் மற்றும் கல்விசார் தரவுகள் உருவாகும் பாடசாலை மட்டம் முதல் உயர் மட்டத்திற்கு தரவுகள் மற்றும் தகவல் செல்வதற்காக முறையான வேலைத்திட்டமொன்றை தேசிய மட்டத்தில் அறிமுகம் செய்வதானது காலத்தின் தேவையாக உருவெடுத்த விடயமொன்றாகும். குறித்த தேவையை பூர்த்தி செய்வதன் முதல் கட்டமாக பாடசாலை மட்டத்தில் அப் பணிகளை மேற்கொள்வதற்காக நிரந்தர உத்தியோகத்தர் ஒருவரை நியமிக்கும் நோக்குடன் கல்விச் செயலாளரின் 2022.11.15ம் திகதியுடைய "பாடசாலைகளில் தரவு உத்தியோகத்தர்களை நியமித்தல்" எனும் தலைப்பில் கடிதம் ஒன்று அனுப்பிவைக்கப்பட்டது.*

*அக் கடிதம் மூலமாக நாட்டின் அனைத்து அரச பாடசாலைகளதும் தரவு முகாமைத்துவப் பணிகளுக்காக அப் பாடசாலைகளில் நிலைப்படுத்தப்பட்டுள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர்களிலிருந்து பொருத்தமான உத்தியோகத்தர் ஒருவரை அல்லது வேறு கல்விசார் அல்லது கல்வி சாரா உத்தியோகத்தர் ஒருவரை அல்லது உத்தியோகத்தர்களை நியமித்துக் கொள்வதற்கான ஆலோசனைகள் வழங்கப்பட்டன. அத்துடன் அதனுடன் இணைந்ததாக கோட்டங்கள், வலயங்கள் மற்றும் மாகாணக் கல்வி அலுவலகங்களில் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள் அல்லது தகவல் தொழில்நுட்ப சேவைக்குரிய எவரேனும் ஒரு உத்தியோகத்தரை இதற்காக நியமித்துக் கொள்ளுமாறும் ஆலோசனைகள் வழங்கப்பட்டன. கோட்டம், வலயம் மற்றும் மாகாணக் கல்வி அலுவலகங்களுக்காக நியமிக்கப்படும் உத்தியோகத்தர்கள் கோட்ட, வலய மற்றும் மாகாண மட்ட தரவு உத்தியோகத்தர்களாக நியமிக்கப்பட்டனர். இவ்வாறாக நியமிக்கப்பட்ட பாடசாலை, கோட்ட, வலய மற்றும் மாகாண மட்ட தரவு உத்தியோகத்தர்கள் கல்வி முறைமையின் தரவு தொடர்பான செயற்பாடுகளுக்காக அவர்களது பங்களிப்பினை வழங்குவார்கள் என்பதாக இதனூடாக எதிர்பார்க்கப்படுகின்றது.*

அவ்வாறாக நியமித்துக் கொள்ளப்பட்ட உத்தியோகத்தர் கல்விசாரா பணியாளர்கள் முதல் கல்விசார் பணியாளர்கள் வரை பல்வேறு பதவிகளுக்குரியவர்களாக இருப்பது அவதானிக்கப்பட்டது.

| | பதவி | எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | ஆசிரியர் | 5441 |
| 02 | அபிவிருத்தி உத்தியோகத்தர் | 4639 |
| 03 | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப உதவியாளர் | 96 |
| 04 | முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள், நூலக உதவியாளர்கள், பாடசாலை ஊழியர், பாடசாலை காவலாளி உட்படலாக ஏனைய கல்விசாரா பணிக்குழுவினர் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்கள் | 905 |

இவ் உத்தியோகத்தர்கள் பாடசாலை மட்டத்தில் பாடசாலை தரவு முகாமைத்துவப் பணிகளுக்காக நியமிக்கப்பட்டுள்ளதுடன், அவர்களது பிரதான பணிகளுக்கு மேலதிகமான பணியொன்றாக இச் செயன்முறையில் ஈடுபடுகின்றனர். அவர்களை கல்விசார் தரவுளின் முகாமைத்துவப் பணிகளுக்காக திசைமுகப் படுத்தும் நோக்குடன் கற்றல் முகாமைத்துவ முறைமை ஒன்றினூடாக அடிப்படை கணிணிப் பயிற்சிப் பாடநெறி ஒன்றைத் தொடர்வதற்கான வாய்ப்பு அவர்களுக்கு வழங்கப்பட்டது. குறித்த அடிப்படைப் பாடநெறியினை வெற்றிகரமாக நிறைவு செய்தவர்களுக்கு தானியங்கி முறையில் உருவாகும் கல்வி அமைச்சினால் சான்றுப்படுத்தப்பட்ட இலத்திரனியல் சான்றிதழ் ஒன்றும் வழங்கப்பட்டது. இங்கு விசேடமாக குறிப்பிடப்படவேண்டிய விடயம் என்னவெனில், கல்வி முறைமையினுள் தரவு உத்தியோகத்தர்கள் அடிக்கடி மாற்றமடைவதால் புதிதாக இப் பணிகளை மேற்கொள்வதற்காக இணையும் தரவு உத்தியோகத்தர்களை முறையாக நியமித்துக் கொள்ளல் மற்றும் அவர்களும் பயிற்சிப் பாடநெறியினைத் தொடரக் கூடிய வகையில் அவர்களை பதிவு செய்தல் மற்றும் நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்களை திசைமுகப்படுத்தல் போன்ற பணிகளையும் முறையாக மேற்கொள்ளவேண்டிய அவசியம் ஏற்படுவதாகும். இதன் போது உரிய உத்தியோகத்தர்கள் இவ் அடிப்படைப் பாடநெறியினைத் தொடர்வதனூடாக கல்வி முறைமைக்கு அவசியமான தரவுகளை அடையாளம் காணல், சேகரித்தல், அவற்றை சரிபார்த்தல், பகுப்பாய்வு செய்தல் மற்றும் அவசியமான சந்தர்ப்பங்களில் அவற்றை முன்னிலைப்படுத்துதல் போன்ற பணிகள் இதனூடாக மேற்கொள்ளப்படுகின்றன.

அதற்கமைய ஏற்கனவே கல்விப் புலத்தினுள் முனைப்புடன் தமது கடமைகளில் ஈடுபடும் தரவு உத்தியோகத்தர்களூடாக மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளில் கீழ்வரும் பிரதானமான சாதக குணாம்சங்களை அடையாளம் கண்டுகொள்ள முடியும்.

01. பாடசாலை மட்ட தரவுகள் தொடர்பில் குறிப்பிட்ட ஒரு உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டிருப்பதனூடாக அதற்குப் பொறுப்புக் கூறக்கூடிய மற்றும் அறிவை உடைய இற்றைப்படுத்தப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரது உதவி பாடசாலை நிர்வாகத்திற்கு கிடைக்கப்பெறல்

02. தரவுகள் தொடர்பில் விசாரிப்பதற்கு பொறுப்பாக கோட்டம், வலயம் மற்றும் மாகாணம் ஆகிய அனைத்து மட்டங்களிலும் உத்தியோகத்தர் ஒருவர் இருத்தல்.

03. வருடாந்த பாடசாலைக் கணக்கெடுப்பினை (Annual School Census) வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துதல்.

04. பாடசாலை மட்டத்தில் நாளாந்தம் அவசியமாகும் அடிப்படைத் தரவுகளை இற்றைப்படுத்தி பேணுதல்.

05. கல்விசார் தரவுகளின் அடிப்படையில் தீர்மானமெடுப்பதற்காக உயர் முகாமைத்துவத்திற்கு அவசியமான உதவிகளை வழங்குதல்.

06. கல்வி அமைச்சினூடாக விருத்தி செய்யப்பட்டுள்ள தகவல் முறைமைக்கு பாடசாலை, கோட்ட, வலய மற்றும் மாகாண மட்ட தரவுகளை உள்ளீடு செய்வதற்குப் பொறுப்பான ஒரு உத்தியோகத்தர் இருப்பதனூடாக அம் முறைமைகளை இற்றைப்படுத்தி பேணக்கூடியதாக இருத்தல்.

இந்தப் பின்னணியினுள் ஆரம்பம் முதல் இது வரையில் இச் செயன்முறையினை முறையாக மேற்கொள்ளப்பட்டாலும் அவ்வாறாக செயற்படும் தரவு உத்தியோகத்தர்களை ஊக்குவிப்பது காலத்தின் தேவையாக உள்ளதாக தற்போது இனங்காணப்பட்டுள்ளது. அதன் மூலமாக அவ் உத்தியோகத்தர்களை சுய ஊக்குவிப்புக்குட்படுத்துதல், அவர்கள் தரவுகளை கையாளுதல் தொடர்பில் அறிவை வழங்குதல், இற்றைப்படுத்துதல் மற்றும் இச் செயன்முறையின் துல்லியத் தன்மை மற்றும் வினைத்திறன் மிக்கதன்மையையும் பேணி விளைதிறனுடன் கல்வி முறைமையினுள் நடைமுறைப்படுத்துவது இந்த ஊக்குவிப்பினூடாக எதிர்பார்க்கப்படுகின்றது.

**2. தரவு உத்தியோகத்தர்களுக்கான ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் குறிக்கோள்கள்:**

- தரவு உத்தியோகத்தர்களது செயல்திறனை மேம்படுத்துதல்.
- கல்விச் செயன்முறைய்டன் இணைந்ததாக தரவுகள் தொடர்பிலான செயன்முறையினை முறைப்படுத்துதல்/ வலுவூட்டுதல்.
- வினைத்திறனுடன் கூடிய சேவை ஒன்றை வழங்குவதனூடாக உத்தியோகத்தர்களை ஊக்குவித்தல்.
- பாடசாலை முறைமையை டிஜிட்டல்மயப்படுத்துவதனூடாக வலுவூட்டுவதற்கு அவசியமான பின்னணியினை அமைத்தல்.

- *சிறந்த விளைதிறன் மிக்க சேவையை வழங்குவதற்காக கல்வியுடன் தொடர்புடைய தகவல்களை நேர்த்தியாக கையாளுதல், பயன்படுத்துதல், பகுப்பாய்வு செய்தல், அறிக்கைகளை தயாரித்தல்.*
- *தரவு முறைமைகள் இற்றைப்படுத்தப்படாமையினால் ஏற்படக்கூடிய சிக்கல்களுக்கு தீர்வு கிடைத்தல்.*

**3. *தரவு உத்தியோகத்தர்களை ஊக்குவிப்பதற்கான செயன்முறைகள்:***

*அதற்கமைய தற்போதளவில் கல்வி முறைமையில் இருக்கும் தரவு உத்தியோகத்தர்களை ஊக்குவிப்பதனூடாக கீழ்வரும் செயன்முறைகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் திட்டமிடப்பட்டுள்ளன.*

I. *தரவு உத்தியோகத்தர்களுக்காக தயாரிக்கப்பட்டுள்ள ஆரம்ப நிகழ்நிலைப் பாடநெறியைத் அனைத்து தரவு உத்தியோகத்தர்களையும் தொடரச் செய்தல்.*

*வலய மட்டத்தில் சுய நிகழ்நிலைக் கற்றல் முறைமையைப் பயன்படுத்துவதற்கு அறியப்படுத்துதல், ஊக்குவித்தல், வலயம் மற்றும் மாகாண மட்டத்தில் தரவு உத்தியோகத்தர்களை வழிப்படுத்துதல்.*

II. *தரவு உத்தியோகத்தர்களுக்கான உயர் நிகழ்நிலைப் பாடநெறியைத் தொடர்வதற்காக அனைத்து தரவு உத்தியோகத்தர்களையும் வழிப்படுத்துதல்.*

*ஆரம்ப பாடநெறியை பூரணப்படுத்திய தரவு உத்தியோகத்தர்களுக்கு உயர் பாடநெறி தொடர்பில் அறியப்படுத்துதல் மற்றும் அவற்றை தொடர சந்தர்ப்பமளித்தல்.*

III. *தரவு உத்தியோகத்தர்களது வினைத்திறனை மதிப்பீடு செய்வதற்காக நிகழ்நிலை தரவு முறைமைகளுக்கு (உ+ம்: வருடாந்த பாடசாலைக் கணக்கெடுப்பு) சரியாகவும் இற்றைப்படுத்தப்பட்ட தரவுகளை உள்ளீடு செய்வதன் அடிப்படையில் மாகாண/ வலய/ கோட்டம் மற்றும் பாடசாலை மட்ட உத்தியோகத்தர்களை கௌரவிப்பதற்காக பாராட்டுச் சான்றிதழ்களை வழங்குதல்.*

A. <u>*மாகாண மட்டம்*</u>

*மாகாண மட்ட உத்தியோகத்தர்களுக்கு கீழ்வரும் நியதிகளின் அடிப்படையில் கல்விச் செயலாளரால் பாராட்டுச் சான்றிதழ்களை வழங்குதல்:*

1. *வருடாந்த பாடசாலை கணக்கெடுப்பிற்கான தரவுகளை உள்ளீடு செய்வதில் வினைத்திறன் - உச்ச பட்சம்* 10 *புள்ளிகள்*

   *கல்வி அமைச்சின் புள்ளிவிபரவியல் கிளையினூடாக பெற்றுக் கொள்ளப்படும் தகவல்களுக்கமைய வருடாந்த பாடசாலைக் கணக்கெடுப்பினை சரியாக நிறைவு செய்யும் தேசிய மட்ட நிலைவரிசையின் அடிப்படையில் பெற்றுக் கொள்ளும் புள்ளிகள்:*

| வருடாந்த பாடசாலைக் கணக்கெடுப்பினை சரியாக நிறைவு செய்யும் தேசிய மட்ட நிலை வரிசை இலக்கம் | பெற்றுக் கொள்ளக்கூடிய புள்ளிகள் |
|---|---|
| 1 - 2 | 10 |
| 3 - 6 | 08 |
| 7 - 9 | 06 |

2. *ஆரம்ப பாடநெறியின் சான்றிதழைப் பெற்றிருத்தல் – 10 புள்ளிகள்*
3. *உயர் பாடநெறியின் சான்றிதழைப் பெற்றிருத்தல் – 10 புள்ளிகள்*
4. *கல்வி அமைச்சின் நியதிகள் - 20 புள்ளிகள்*

***ஆகக் குறைந்தது 35 புள்ளிகளைப் பெற்றுக் கொள்ளும் தரவு உத்தியோகத்தர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ் வழங்கப்படும்.***

B. *வலய மட்டம்*

*வலய மட்ட உத்தியோகத்தர்களுக்கு கீழ்வரும் நியதிகளின் அடிப்படையில் மாகாணக் கல்விப் பணிப்பாளரூடாக பாராட்டுச் சான்றிதழ் வழங்குதல்:*

1. *வருடாந்த பாடசாலை கணக்கெடுப்பிற்கான தரவுகளை உள்ளீடு செய்வதில் வினைத்திறன் - உச்ச பட்சம் 10 புள்ளிகள்*

*கல்வி அமைச்சின் புள்ளிவிபரவியல் கிளையினூடாக பெற்றுக் கொள்ளப்படும் தகவல்களுக்கமைய வருடாந்த பாடசாலைக் கணக்கெடுப்பினை சரியாக நிறைவு செய்யும் தேசிய மட்ட நிலைவரிசையின் அடிப்படையில் பெற்றுக் கொள்ளும் புள்ளிகள்:*

| வருடாந்த பாடசாலைக் கணக்கெடுப்பினை சரியாக நிறைவு செய்யும் தேசிய மட்ட நிலை வரிசை இலக்கம் | பெற்றுக் கொள்ளக்கூடிய புள்ளிகள் |
|---|---|
| 1 - 2 | 10 |
| 3 - 6 | 08 |
| 7 - 10 | 06 |
| 11-14 | 04 |
| 15 -18 | 02 |

| | |
|---|---|
| 19 - 20 | 01 |

1. *ஆரம்ப பாடநெறியின் சான்றிதழைப் பெற்றிருத்தல்* – *10 புள்ளிகள்*
2. *உயர் பாடநெறியின் சான்றிதழைப் பெற்றிருத்தல்* – *10 புள்ளிகள்*
3. *மாகாண நியதிகள்* - 20 *புள்ளிகள்*

   *மாகாணத்திற்கு விசேடத்துவம் மிக்க நியதிகளை மாகாணக் கல்வித் திணைக்களம் தயாரித்து அதனை கல்வி அமைச்சிற்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.*

   ***ஆகக் குறைந்தது 35 புள்ளிகளைப் பெற்றுக் கொள்ளும் தரவு உத்தியோகத்தர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ் வழங்கப்படும்.***

B. *கோட்ட மட்டம்*

*கோட்ட மட்ட உத்தியோகத்தர்களுக்கு கீழ்வரும் நியதிகளின் அடிப்படையில் மாகாணக் கல்விப் பணிப்பாளரூடாக பாராட்டுச் சான்றிதழ் வழங்குதல்*

1. *வருடாந்த பாடசாலை கணக்கெடுப்பிற்கான தரவுகளை உள்ளீடு செய்வதில் வினைத்திறன்* - *உச்ச பட்சம்* 10 *புள்ளிகள்*

   *கல்வி அமைச்சின் புள்ளிவிபரவியல் கிளையினூடாக பெற்றுக் கொள்ளப்படும் தகவல்களுக்கமைய வருடாந்த பாடசாலைக் கணக்கெடுப்பினை சரியாக நிறைவு செய்யும் தேசிய மட்ட நிலைவரிசையின் அடிப்படையில் பெற்றுக் கொள்ளும் புள்ளிகள்:*

| வருடாந்த பாடசாலைக் கணக்கெடுப்பினை சரியாக நிறைவு செய்யும் தேசிய மட்ட நிலை வரிசை இலக்கம் | பெற்றுக் கொள்ளக்கூடிய புள்ளிகள் |
|---|---|
| 1 - 5 | 10 |
| 6 - 10 | 08 |
| 11 - 15 | 06 |
| 16 - 20 | 04 |
| 21 -25 | 02 |
| 26 - 30 | 01 |

1. *ஆரம்ப பாடநெறியின் சான்றிதழைப் பெற்றிருத்தல்* – *10 புள்ளிகள்*
2. *உயர் பாடநெறியின் சான்றிதழைப் பெற்றிருத்தல்* – *10 புள்ளிகள்*
3. *மாகாண நியதிகள்* - 20 *புள்ளிகள்*

*மாகாணத்திற்கு விசேடத்துவம் மிக்க நியதிகளை மாகாணக் கல்வித் திணைக்களம் தயாரித்து அதனை கல்வி அமைச்சிற்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.*

***ஆகக் குறைந்தது 35 புள்ளிகளைப் பெற்றுக் கொள்ளும் தரவு உத்தியோகத்தர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ் வழங்கப்படும்.***

***முக்கியம்***: *மேற்படி மாகாண, வலய மற்றும் கோட்ட மட்ட தரவு உத்தியோகத்தர்களின் மதிப்பீட்டுச் செயன்முறையினுள் ஒவ்வொரு மட்டத்திலும் தரவு முகாமையாளர்களும் கௌரவிக்கப்படுவர்.*

C. *<u>பாடசாலை மட்டம்</u>*

*பாடசாலை மட்டத்தில் கீழ்வரும் நியதிகளின் அடிப்படையில் வலயக் கல்விப் பணிப்பாளரின் பரிந்துரையுடன் மாகாணக் கல்விப் பணிப்பாளரூடாக பாராட்டுச் சான்றிதழ் வழங்குதல்*

1. *வருடாந்த பாடசாலை கணக்கெடுப்பிற்கான தரவுகளை உள்ளீடு செய்வதில் வினைத்திறன்* - *உச்ச பட்சம்* 10 *புள்ளிகள்*

   *மாகாணக் கல்வித் திணைக்களங்காளால் கல்வி அமைச்சின் புள்ளிவிபரவியல் கிளையிலிருந்து இவ் விடயம் தொடர்பில் தகவல்களைப் பெற்றுக் கொள்ள வேண்டும். பாடசாலை மட்ட கணக்கெடுப்பு செயற்பாடுகள் தரவு உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்பட்டமையை அதிபர் உறுதிப்படுத்த வேண்டும்.*

1. *ஆரம்ப பாடநெறிச் சான்றிதழ் பெற்றிருத்தல்* - 10 *புள்ளிகள்*
2. *உயர் பாடநெறிச் சான்றிதழ் பெற்றிருத்தல்* - 10 *புள்ளிகள்*
3. *மாகாண நியதிகள்* - 20 *புள்ளிகள்*
   *மாகாணத்திற்கு விசேடத்துவம் மிக்க நியதிகள் மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்டு கல்வி அமைச்சிற்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.*

***ஆகக் குறைந்தது 35 இற்கு மேல் பெற்ற உத்தியோகத்தர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கப்படும்.***

***க.கொ:*** *இம் மதிப்பீட்டுச் செயன்முறையின் நியதிகள் தொடர்பில் இறுதித் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் கல்வி அமைச்சினைச் சாரும் என்பதுடன், அது தொடர்பில் திருத்தங்கள் இருப்பின் முன்கூட்டியே உரிய தரப்பினர் அறியப்படுத்தப்படுவர்.*

II. *உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சி வாய்ப்புக்களை வழங்குதல்:*
*உள்நாட்டுப் பயிற்சி வாய்ப்புக்களை வழங்குதல்: மாகாண மற்றும் வலய மட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மூலமாக வெளிநாட்டுப் பயிற்சி வாய்ப்புக்களை வழங்குதல்: முறையான செயன்முறை மூலம் (நிகழ்நிலை/ நேரடி) பயிற்சி வாய்ப்புக்களை வழங்குதல்.*

III. *அனுபவங்களைப் பரிமாறிக்கொள்ளும் நிகழ்ச்சித்திட்டங்களை தயாரித்தல்*

IV. *தரவு உத்தியோகத்தர் குழாம் ஒன்றை நிறுவுதல்.*

### 4. *நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் கால எல்லை:*

*இந் நிகழ்ச்சித்திட்டத்தை* **2025 *ஜனவரி மாதம்* 01 *ம் திகதி முதல் வருடாந்தம்*** *நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. ஒவ்வொரு வருடமும் முந்தைய வருடச் செயன்முறைகளின் அடிப்படையில் பாராட்டுச் சான்றிதழ்களை வழங்குவதற்காக மதிப்பீடு செய்யப்படும்.*

### 5. *கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு :*

*ஒட்டுமொத்த நிகழ்ச்சித்திட்டத்தினதும் கண்காணிப்பு மற்றும் மதிப்பீடுகள் கல்வி அமைச்சினால் மேற்கொள்ளப்படும் என்பதுடன் அதற்கான ஒருங்கிணைப்புப் பணிகள் மாகாணக் கல்வித் திணைக்களங்களூடாக மேற்கொள்ளப்படும். அவ்வாறே இந் நிகழ்ச்சித்திட்டத்தினுள் மதிப்பீட்டுச் செயன்முறையின் தீர்மானங்கள் தொடர்பில் இறுதித் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் கல்வி அமைசிச்னைச் சாரும்.*

**வளப் பங்களிப்பு**

01) *திருமதி எஸ்.டீ கஸ்தூரியாராச்சி, கல்விப் பணிப்பாளர், தரவு முகாமைத்துவக் கிளை மற்றும் தகவல் முறைமை அபிவிருத்தி அலகு, கல்வி அமைச்சு, "இசுருபாய", பெலவத்த, பத்தரமுல்ல.*

02) *திருமதி. எச்.ஏ.எஸ்.பீ சேனாரத்ன, பிரதிக் கல்விப் பணிப்பாளர், தரவு முகாமைத்துவக் கிளை மற்றும் தகவல் முறைமை அபிவிருத்தி அலகு, கல்வி அமைச்சு, "இசுருபாய", பெலவத்த, பத்தரமுல்ல.*

03) *திருமதி ஏ.கே.பீ.எஸ் கொடிதுவக்கு, பிரதிக் கல்விப் பணிப்பாளர், மாகாணக் கல்வித் திணைக்களம் (மத்திய மாகாணம்), ரயில் நிலைய வீதி, கண்டி.*

04) *திருமதி கே.எம் ப்ரபானி, பிரதிக் கல்விப் பணிப்பாளர், மாகாணக் கல்வித் திணைக்களம் (தென் மாகாணம்), இலக்கம் 19, மேல் டிக்ஸன் வீதி, காலி.*

05) *திரு. எஸ்.எம்.பீ பண்டார, பிரதிக் கல்விப் பணிப்பாளர், மாகாணக் கல்வித் திணைக்களம் (ஊவா மாகாணம்), வெலகெதர வீதி, காலி.*

06) *திரு. எம்.டீ.எம் அன்சாப், உதவிக் கல்விப் பணிப்பாளர் (திட்டமிடல் மற்றும் தரவு முகாமைத்துவம்), மாகாணக் கல்வித் திணைக்களம் (சபரகமுவ மாகாணம்), கெற்றன்கம, இரத்தினபுரி*

07) *திரு. எஸ். நிரூஷன், உதவிக் கல்விப் பணிப்பாளர், மாகாணக் கல்வித் திணைக்களம் (வடக்கு மாகாணம்), செம்மணி வீதி, யாழ்ப்பாணம்.*

08) *திருமதி ஈ.எம்.ஏ.எஸ் ஏகநாயக்க, பிரதிக் கல்விப் பணிப்பாளர், மாகாணக் கல்வித் திணைக்களம் (வட மேல் மாகாணம்), கண்டி வீதி, கெட்டுவான வீதி, குருணாகல்.*

09) *திருமதி எச்.எம்.டீ.எஸ் ஹேரத், பிரதிக் கல்விப் பணிப்பாளர் (திட்டமிடல், ஆராய்ச்சி மற்றும் தரவு முகாமைத்துவம்), மாகாணக் கல்வித் திணைக்களம் (வட மத்திய மாகாணம்), அநுராதபுரம்.*

10) *திருமதி பீ.எம்.எஸ்.ஏ பஸ்நாயக்க, பிரதிக் கல்விப் பணிப்பாளர் (திட்டமிடல்), மாகாணக் கல்வித் திணைக்களம் (மேல் மாகாணம்), இலக்கம் 89, "ரன்மகபாய", கடுவலை வீதி, பத்தரமுல்ல*

11) *திரு. எஸ் துஷ்யந்தன், பிரதிக் கல்விப் பணிப்பாளர், மாகாணக் கல்வித் திணைக்களம் (கிழக்கு மாகாணம்), உட்துறைமுக வீதி, திருகோணமலை*